## முலடியன பிரதேச சபை - 2022

-----------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முலடியன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, முலடியன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 7,452,745 தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 153,461 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டிற்குரிய 2022 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 989,819 இற்கான பெறுமதி பெற வேண்டிய ஏனைய வருமானங்களுக்கு செலவு வைக்கப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 620,631 தொகையினை மூலதனப்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 மற்றும் 2022 ஆண்டுகளின் போது சபைக்கு எரிபொருள் பெற்றுக் கொள்ளும் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 500,000 இற்கான பாதுகாப்பு பிணை வைப்பு எரிபொருள் செலவுக்கு பதிலீடு செய்யாமல் மீளாய்வாண்டின் செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட தொகை எரிபொருள் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு எரிபொருள் பில் பத்திரங்களுக்கு பதிலீடு செய்யும் வரை பேணிச் செல்லப்படுகின்றது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையில் நிறுவப்பட்டிருந்த சூரியப் பெனலின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை விற்பனை செய்வதன் மூலம் இலங்கை மின்சார சபையில் இருந்து பெற வேண்டிய ரூபா 608,237 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய கூட்டுத்தொகை ரூபா 161,104,352 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 94,548,665 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் |

| | |
|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 567,814 தொகைக்கான 02 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 24(1) | பாதைகளின் அடையாளங்கள் மற்றும் எல்லைகளை அடையாளமிட்டு அவற்றின் பெயர் அட்டவணை ஒன்று வெளியிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டு இறுதியளவில் 08 பிரிவுகளில் புதிதாக இனங்காணப்பட்டிருந்த 315 பாதைகள் வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | GIS/GPS மென் கருவியை பயன்படுத்தி தரவு முறைமையொன்று தாயரிக்கப்பட்டு வருகின்றது எனவும் வர்த்தமானியில் வெளியிடப்படாத பாதைகள் தொடர்பாக தகவல்கள் சேகரித்து அனைத்து பாதைகளையும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 155,125 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 9,446,679 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,492,200 | 22,889 | 44,354 | 73,144 | 1,282,400 | 22,952 | 11,062 | 94,609 |
| ii. | வாடகை | 12,459,200 | 3,288,425 | 4,042,085 | 765,241 | 9,575,200 | 3,067,971 | 3,105,818 | 1,518,901 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 540,200 | 1,508,342 | 1,571,342 | 19,450 | 550,200 | 1,249,680 | 1,254,680 | 82,450 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 12,668,000 | 900,713 | 389,278 | 772,052 | 13,304,000 | 19,872 | 9,936 | 260,617 |
| | மொத்தம் | 27,159,600 | 5,720,369 | 6,047,059 | 1,629,887 | 24,711,800 | 4,360,475 | 4,381,496 | 1,956,577 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 இற்கு இணங்க பிரதேசத்தை சேர்ந்த முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் 2022 பெப்ரவரி 11 திகதிய 2267 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்தல் 2022 செப்தெம்பர் 21 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டளவிலும் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டிருந்த தெய்யந்தர நகரத்தை சார்ந்த பிரதேசங்களுக்கு வீதவரி விதிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக ஆளுனரிடம் வேண்டப்பட்டுள்ளது என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 68 கடை அறைகளில் 58 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் 35 வாடகையாளரிடம் ரூபா | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 694,714 இற்கான கடை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. மேலும் அந்த நிலுவை மீதியில் மூடப்பட்டிருந்த 10 கடைகளுக்காக 2008-2013 வருட காலப் பகுதி தொடர்பாக கடை வாடகை சிட்டையிடப்பட்டமையால் அறவீடு செய்ய முடியாமல் காணப்படும் ரூபா 318,850 இற்கான கடையறை வாடகையும் அடங்கியுள்ளது. | | |
| (இ) | சபைக்கு சொந்தமான மூன்று வர்த்தக தொடர்கட்டிடங்களை சேர்ந்த 32 கடையறைகளின் புதிய பெறுமதி மதிப்பீட்டு கடை வாடகை உட்படுத்தப்பட்டு கடை வாடகை உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன் 14 கடையறைகளின் மாதாந்த கடை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்து நாளதுவரையாக்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் புதிய மதிப்பீட்டிற்காக வேண்டப்பட்டுள்ளது எனவும். | உடன்படிக்கை/ பெறுமதி மதிப்பீடு நாளது வரை ஆக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 51,583 தொகை முத்திரைக் கட்டணம் ரூபா 20,911,183 தொகை காணப்பட்டது. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 126 இற்கு இணங்க நகர் சார் அல்லாத அதிகாரப் பிரதேசத்தினுள் கட்டிட வரைபுகள் மற்றும் துணைப் பகிர்வு அங்கீகரித்தல், கேட்போர் கூடம் வாடகைக்கு வழங்குதல் மற்றும் சபைக்கு சொந்தமான | துணை விதிகள் தயாரித்தல் தொடர்பாக ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

முலடியன மற்றும் மாக்கந்துர விளையாட்டுத் திடல்களை வாடகைக்கு கொடுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக சபையினால் துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 154(1) இற்கு இணங்க காணிகள் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தில் நூற்றிற்கு ஒன்றிற்கு சமமான வரி ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் முறைசாரா விதமாக 03 காணிகளில் இருந்து ரூபா 470,000 இற்கான முற்பணம் பெற்றுக் கொண்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுச் செயலாளரின் PR/01/01 இலக்கங் கொண்ட 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருக்காத காரணத்தினால் ரூபா 763,815 இற்கான செலவொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர எல்லையினுள் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டு வந்த 03 கட்டிடங்கள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கியுள்ள 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணைக்கு இணங்க ரூபா 854,400 இற்கான கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திட்டக் குழுவின் பரிந்துரையின் படி சட்ட ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர்சார் அல்லாத எல்லையுள் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் | துணை விதிகள் தயாரிப்பதற்கு உரிய ஆரம்ப அலுவல்கள் | துணை விதிகள் தயாரிக்கப்பட்டு நகரம் சார் அல்லாத |

| | | |
|---|---|---|
| கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 06 கட்டிடங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அந்த நிர்மாணவேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | எல்லையில் காணப்படும் அங்காரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப சேவை தொகுதியை சேர்ந்த 06 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி நிரப்பப்பட்டிருக்கும் போது நாளாந்த மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 06 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு குறிப்பிட்ட கடமைகளுக்கு புறம்பாக கடமைகள் சாட்டப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 2,234,086 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவ்வாறான ஊழியர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படமாட்டாது என. | பதவிக்குரிய கடமைகளில் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். |